1994 ஏப்ரல் 13]

என்று சொன்னார்கள். அதற்கு நன்றி. இயக்கப்படுகின்ற பேருந்தை நிறுத்தக் கூடாது என்ற அடிப்படையிலேதான் மோசமான சாலையாக இருந்தாலும் இயக்கிக்கொண்டிருக்கிறோம். புதிதாகப் பேருந்துகளை இயக்குகிற சாலைகளைச் சிறப்பான முறையிலே சீரமைத்த பிறகுதான் இயக்கவேண்டும் என்று அந்தத் துறைக்கு அரசின் சார்பாகக் கட்டளைக் பிறப்பித்த காரணத்தினாலேதான் நீங்கள் குறிப்பிடுகிற கிராமத்திலே 1052 பேர் ஜனத்தொகை இருந்தாலும்கூட 1.1 கிலோ மீட்டர் இருந்தாலும் அந்தச் சாலை சரியான சாலையாக இல்லாத காரணத்தினாலே இயக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலையை கிராமச்சாலைகளின்கீழ் எடுத்து அதைத் தார்ச் சாலையாக மாற்றுவதற்கான கோரிக்கையை நான் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு வைத்திருக்கிறேன். ஜே. வி. வி. டி. திட்டத்தின்கீழ் அந்தச் சாலை இப்போது ஓரளவுக்கு சரி செய்யப்பட்டிருக்கிறது. அநேகமாக அந்தத் தகவல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்காது என்று நினைக்கிறேன். எனவே அந்தச் சாலையை நேரடியாக பி.டி.சி. நிறுவனம் பார்வையிட வைத்து அங்கே பேருந்துகளை விடுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கிராமச் சாலைகள் திட்டத்திலே எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்தப் பணிகள் முடிந்தவுடனேயே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு அடுத்த நாளே பேருந்தை இயக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 265, திரு. வே. தம்புசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

265—

திருவாரூர் தொகுதி, சாட்டியகுடியிலிருந்து முப்பத்தி கோட்டகம்வரை நகரப் பேருந்து இயக்குதல்

*** 20007-**திரு. வே. தம்புசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, சாட்டியகுடியில் இருந்து முப்பத்தி கோட்டகம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாட்டிய குடியிலிருந்து பசுக்கரைவேலி, வடக்குப் பதியூர், தெற்குப் பதியூர், முப்பத்திக் கோட்டகம், வல்லவிநாயகக் கோட்டகம் ஆகிய பகுதிகள் உள் கிராமங்களாக இருக்கின்றன. அந்தக் கிராம மக்கள் பேருந்து சாலையை எந்தப் பக்கம் போகவேண்டுமானாலும், அடையவேண்டுமென்றால், ஏறத்தாழ 5,6 கிலோ மீட்டர் தூரம், செல்லவேண்டியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட கிராமங்களை இணைக்கின்ற வகையில் அந்தத் தடத்தில் ஒரு நல்ல பேருந்தை இயக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்டிருப்பது 6 கிலோ மீட்டர் தொலைவிலேதான் இருக்கிறது. இருந்தாலும் சாலைகள் சில இடங்களில் குண்டும் குழியுமாக இருக்கின்றன. வல்லவிநாயகக்கோட்டகத்திலிருந்து முப்பத்திக்கோட்டகம் வரையிலே 2 கிலோ மீட்டர் மண் சாலையாக இருக்கிறது. ஆகவேதான் அந்தப் பேருந்துகளை அங்கே இயக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று குறிப்பிட்டேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சாட்டியகுடி வழி என்பது நாகை-திருவாரூர்-திருத்துறைப்பூண்டியினுடைய பேருந்து சாலையாகும். அந்தச் சாலையில் நகரப்பேருந்துகளும் சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் சென்றுகொண்டிருக்கின்றன. அப்படிச் செல்கின்ற அந்தப் பேருந்துகள் காலையிலே ஒரு தடவையாவது மாலையில் ஒரு தடவையாவது வடக்கிப்பதியூர் நல்ல சாலை இருக்கக்கூடிய வடக்குப்பதியூர் வரையிலேயாவது சென்று திரும்புவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்கள்ா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநருக்கு

1994 ஏப்ரல் 13]

ஆணை பிறப்பித்து, அதை நேரடியாகப் பார்வையிட்டு, இயலுமானால் இயக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 266, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

266—

போளூர், அத்திமூர், மாம்பட்டு ஏரிகளை ஆழப்படுத்தும் திட்டம்

*** 11879-திரு. தா. வேடியப்பன்:***

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டத்தில், போளூர், அத்திமூர், மாம்பட்டு ஏரிகளை புல்டோசர் உதவியுடன் ஆழப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): போளூர், அத்திமூர், மாம்பட்டு ஆகிய ஏரிகளில் தற்போது முழு அளவில் நீர் நிறைந்திருப்பதால் புல்டோசர் உதவியுடன் ஆழப்படுத்த இயலாது.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 ஏரிகளைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 4 அடி உயரம், 5 அடி உயரம்வரை எல்லா ஏரிகளிலுமே மணல் நிறைந்திருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையின் தொடர்ச்சியான ஜவ்வாது மலைக்கு அருகிலே அந்த 3 ஏரிகளும் இருப்பதால் அதிகமான அளவில் மணல் வந்து நிரம்பி தூர்ந்து இருக்கிறது. எனவே, அந்தப் பகுதி விவசாய மக்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வண்ணம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை வரும் காலத்திலாவது பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர், அத்திமூர், மாம்பட்டு ஏரிகளில் இப்போது நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல தண்ணீர் இருக்கிறது. நீர் வற்றிய பின்பு, நீர்ப் பரப்பின் மட்ட அளவுகளை எடுத்து, ஏரியிலுள்ள மண் அளவினைக் கணக்கிட்டு திட்டமிட்டதற்குப் பின்னாலே, கொள்ளளவு